தென்காசி முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
பிறப்பிப்பவர்: திருமதி. அ. ரேணுகா, எம்.எஸ்.சி., பி.எட்.,
மூ.மு.எண்.7623/அ1/2025, நாள்.21.11.2025

பொருள்: – பள்ளிக் கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை நியமனம் – தென்காசி மாவட்டம், செங்கோட்டை, உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் – (லேட்) திரு.நா.சந்திரசேகர் – 06.08.1999–ல் பணிக்காலத்தில் மரணம் வாரிசுதாரரான மகன் திரு.ச.ராம்குமார் என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தென்காசி மாவட்டம், இடைகால், அரசு உயர்நிலைப்பள்ளியில் நியமனம் – 24.01.2024 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 101, பள்ளிக் கல்வி (பட்ஜெட் II)த் துறை நாள் 18.05.2018
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த் துறை நாள் 26.02.2021
3. அரசாணை (நிலை) எண்.151. பள்ளிக் கல்வி [ப.க1(1)]த் துறை நாள் 09.09.2022
4. தென்காசி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 954/அ1/2021 நாள் 26.12.2023
5. அரசு கடித(e file) எண் 4419 [தொ.க1(1)] 2024–1 நாள்17.05.2024
6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின்(பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.26062/ஜே/இ2/2023, நாள்.22.05.2024
7. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த் துறை நாள் 08.03.2023
8. இடைகால், அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கடிதம் ந.க.எண் 70/2025 நாள் 15.09.2025

தென்காசி மாவட்டம், செங்கோட்டை, உதவித் தொடக்கக்கல்வி அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.நா.சந்திரசேகர் என்பார் பணியிலிருக்கும் போது 06.08.1999 –ல் காலமானதால் அன்னாரின் மகனும், வாரிசுதாரருமான திரு.ச.ராம்குமார் என்பாருக்கு கருணை அடிப்படையில் தென்காசி மாவட்டம், இடைகால் அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிவாய்ப்பு வழங்கி பார்வை (4) –ல் காணும் தென்காசி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின் படி ஆணையிடப்பட்டதின் பேரில் அன்னார் அப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 24.01.2024 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் நியமன நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிட வேண்டி இடைகால் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியரால் பார்வை(8) – ல் காணும் கடிதத்தின் படி பரிந்துரை செய்து பணிந்தனுப்பப்பட்ட கருதுரு பரிசீலனை செய்யப்பட்டது.

பார்வை (5) –ல் காணும் அரசுக் கடிதம் மற்றும் பார்வை (6) –ல் காணும் தமிழ்நாடு, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம்

வழங்கப்பட்ட பணியாளர்களுக்கு பணியினை வரன்முறை செய்திட எவ்வித விதித்தளர்வாணையும் அரசிடமிருந்து பெற வேண்டிய அவசியம் எழவில்லை எனில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு நியமன அலுவலரான முதன்மைக் கல்வி அலுவலரின் அதிகாரத்திற்கு உட்பட்டு பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, இடைகால், அரசு உயர்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் திரு.ச.ராம்குமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 24.01.2024 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

சார்ந்த பணியாளர் திரு.ச.ராம்குமார் என்பார் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணிக்காலத்தில் ஈராண்டு காலம் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க தமிழ்நாடு அரசு அமைச்சுப் பணிவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

இச்செயல்முறைகளைப் பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளித்திட சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

28/11/25

இணைப்பு: அசல் பணிப்பதிவேடு

26/11/25

முதன்மைக்கல்வி அலுவலர்
தென்காசி.

பெறுநர் : சம்பந்தப்பட்ட பணியாளர் (தலைமையாசிரியர் வழியாக)

நகல் :
1. சென்னை –06, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்,
   அரசு உயர்நிலைப்பள்ளி,
   இடைகால்